KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.35

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

சிவசங்கரி நாவல்களில் பாத்திரங்களும் பண்புகளும்

Characters and Their Qualities in the Novels of Sivasankari

ஆ. வனிதா[1,*], முனைவர் ம. செல்வராசு[2], முனைவர் கதி. முருகேசன்[3]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி – 622403.

[2] இணைப் பேராசிரியர் (ம) நெறியாளர் (ப. நி), கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி – 622403.

[3] உதவிப் பேராசிரியர் (ம) இணை நெறியாளர், தமிழ்த் துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி – 622403.

***Corresponding author:** ஆ. வனிதா, vanithashri41981@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 20 October 2026
Revised: 22 October 2026
Accepted: 25 October 2026

Article ID
KIJTS-2026-0010

Peer review
Double-blind peer review

Keywords
Sivasankari
Characterisation
Vaḷartta Kaṭā
Āyuḷ Taṇṭaṉai
Life
Society
Moral Principles
Realism
Human Nature

ABSTRACT

Sivasankari is a notable writer among modern Tamil novelists. She records the thoughts and feelings of ordinary people with a realistic approach, and her ideas reach the reader mainly through her characters. This paper studies four principal characters – Raji and Sampath in Vaḷartta Kaṭā and Bharath and Mohana in Āyuḷ Taṇṭaṉai – in the light of the theory of characterisation in fiction. It shows how the novels set love, sacrifice and care for the elderly against the corrupting effects of excess wealth and of poverty. The study argues that, for Sivasankari, life becomes beautiful when people help one another and make sacrifices, and that poverty without right guidance can push a person onto a wrong path. Her novels thus stand out as ethical, realistic works that give primary importance to the human mind and emotions.

How to cite this article: ஆ. வனிதா, முனைவர் ம. செல்வராசு, & முனைவர் கதி. முருகேசன் (2026). சிவசங்கரி நாவல்களில் பாத்திரங்களும் பண்புகளும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 450–460. https://doi.org/10.63300/kijts603112026.35
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்ப் புதினப் படைப்பாளர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர் சிவசங்கரி. சமூகத்தில் வாழும் மக்களின் மனநிலையை நடப்பியல் சிந்தனையோடு

தாம் படைத்த நாவல்களில் பதிவு செய்தவர்; அவரது சிந்தனைகள் பாத்திரங்களின் வழியாகவே வெளிப்படுகின்றன. இவ்வாய்வு அவரது *வளர்த்த கடா*, *ஆயுள் தண்டனை* என்னும் இரண்டு நாவல்களில் இடம்பெறும் ராஜி, சம்பத், பரத், மோஹனா என்னும் நான்கு முதன்மைப் பாத்திரங்களைப் பாத்திரப் படைப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் பகுப்பாய்கிறது. அன்பு, விட்டுக்கொடுத்தல், முதியோரைப் பேணுதல் ஆகிய பண்புகளும், செல்வச் செருக்கும் வறுமையும் மனிதக் குணத்தை மாற்றும் விதமும் இந்நாவல்களில் எதிர்நிலையாகக் காட்டப்படுகின்றன. மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவும்போதும் விட்டுக் கொடுக்கும்போதும் வாழ்க்கை அழகு பெறுகிறது என்பதையும், வறுமையில் சரியான வழிகாட்டுதல் இல்லாதபோது வாழ்க்கை தடம் மாறும் என்பதையும் சிவசங்கரி பாத்திரங்களின் வழி உணர்த்துகிறார் என இவ்வாய்வு நிறுவுகிறது. சிவசங்கரியின் நாவல்கள் மனித மனத்திற்கு முதன்மை கொடுத்துப் படைக்கப்பட்ட அறம் சார்ந்த நடப்பியல் படைப்புகளாக விளங்குகின்றன.

திறவுச் சொற்கள்: சிவசங்கரி, பாத்திரப் படைப்பு, வளர்த்த கடா, ஆயுள் தண்டனை, வாழ்க்கை, சமுதாயம், அறக்கோட்பாடு, நடப்பியல், மனித இயல்பு.

1. முன்னுரை

தமிழ் நாவல் உலகில் சிறந்த எழுத்தாற்றலை உடைய பெண் படைப்பாளராக விளங்குபவர் சிவசங்கரி (பிறப்பு: 1942). சிறுகதை, குறுநாவல், நாவல், பயணக் கட்டுரை, வாழ்க்கைச் சரிதம், சிறுவர் கதை எனப் பல துறைகளில் பங்களித்தவர். அவரது படைப்புகள் பல இந்திய மொழிகளிலும் ஆங்கிலம், ஜப்பானியம் முதலிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன; எட்டு நாவல்கள் திரைப்படங்களாகவும் வெளிவந்துள்ளன (“Sivasankari”; “About Sivasankari”). அவரது நாவல்கள் மனிதனின் ஆழமான உணர்வுகளுக்கு முதன்மை கொடுத்துப் படைக்கப்பட்டவை.

மனிதர்கள் தீய குணத்தை ஒதுக்கி நல்ல குணத்தோடு வாழும்போதுதான் வாழ்க்கை அழகு பெறும். பெண்களுக்கு எதிராகவும் குடும்பத்திற்கு எதிராகவும் செயல்படும் ஆண்கள் வாழ்க்கையைச் சிதைப்பவர்களாகவே அறியப்படுவார்கள் என்னும் சிந்தனை அவரது படைப்புகளில் நுட்பமாக அமைந்திருக்கிறது. தம்முடைய உயர்ந்த அறச் சிந்தனைகளை அவர் பாத்திரங்களின் வழியாகவே வெளிப்படுத்துகிறார். எனவே அவரது பாத்திரங்களை ஆராய்வதன் மூலமாக அவர் வலியுறுத்தும் உயரிய குணநலன்களை அறிந்துகொள்ள முடியும். அவ்வடிப்படையில் இவ்வாய்வுக் கட்டுரை சிவசங்கரியின் நாவல்களில் பாத்திரங்களையும் அவற்றின் பண்புகளையும் ஆராய்கிறது.

2. ஆய்வுநோக்கங்கள்

1. நாவலில் பாத்திரப் படைப்பின் இன்றியமையாமையைக் கோட்பாட்டு நோக்கில் விளக்குதல்.

2. *வளர்த்த கடா* நாவலின் ராஜி, சம்பத் பாத்திரங்களின் வழி அன்பு, சமநோக்கு, முதியோர் பேணல் ஆகிய பண்புகளை ஆராய்தல்.
3. *ஆயுள் தண்டனை* நாவலின் பரத், மோஹனா பாத்திரங்களின் வழி செல்வமும் வறுமையும் மனிதக் குணத்தில் ஏற்படுத்தும் மாற்றங்களைக் காட்டுதல்.
4. இரு நாவல்களையும் ஒப்பிட்டு, சிவசங்கரி பாத்திரங்களின் வழி வலியுறுத்தும் சமூகச் செய்திகளை வரையறுத்தல்.

3. ஆய்வு முறையும் எல்லையும்

இவ்வாய்வு விளக்கமுறை, பகுப்பாய்வுமுறை, ஒப்பீட்டுமுறை ஆகியவற்றைப் பின்பற்றுகிறது. சிவசங்கரியின் *வளர்த்த கடா*, *ஆயுள் தண்டனை* ஆகிய இரண்டு நாவல்களும் (வானதி பதிப்பகம்) முதன்மைச் சான்றுகளாகும்; நாவல் கோட்பாட்டு நூல்களும் தமிழ் நாவல் வரலாற்று நூல்களும் இரண்டாம் நிலைச் சான்றுகளாகக் கொள்ளப்பட்டன. நாவல்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் (நூல்ப்பெயர் பக்கம்) என்ற MLA (ஒன்பதாம் பதிப்பு) முறையில் சுட்டப்படுகின்றன. இவ்வாய்வு முதன்மைப் பாத்திரங்களான ராஜி, சம்பத், பரத், மோஹனா என்னும் நான்கு பாத்திரங்களுடன் எல்லையிடப்படுகிறது.

4. முந்தைய ஆய்வுகள்

தமிழ் நாவலின் வளர்ச்சியைக் காலவரிசையிலும் பண்புக்கூறுகளின் அடிப்படையிலும் ஆராய்ந்த முன்னோடி நூல்களாகக் க. கைலாசபதியின் *தமிழ் நாவல் இலக்கியம்*, சிட்டி–சிவபாதசுந்தரம் இணைந்து எழுதிய *தமிழ் நாவல்: நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்* ஆகியவை குறிப்பிடத்தக்கவை (கைலாசபதி; சுந்தரராஜன் மற்றும் சிவபாதசுந்தரம்). நாவலில் பாத்திரங்களைத் தட்டைப் பாத்திரம், உருண்டைப் பாத்திரம் எனப் பகுத்துக் காட்டிய ஈ. எம். ஃபார்ஸ்டரின் நோக்கு (Forster) இவ்வாய்வின் கோட்பாட்டுச் சட்டகமாக அமைகிறது. சிவசங்கரியின் படைப்புகள் முனைவர் பட்ட, இளமுனைவர் பட்ட ஆய்வுகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன ("About Sivasankari"). எனினும் *வளர்த்த கடா*, *ஆயுள் தண்டனை* ஆகிய இரு நாவல்களின் பாத்திரங்களை ஒருசேர வைத்து ஒப்பிடும் ஆய்வு குறைவே. அக்குறையை இவ்வாய்வு நிறைவு செய்கிறது.

5. பாத்திரப் படைப்பு – கோட்பாட்டு விளக்கம்

நாவலின் வெற்றிக்குச் சிறந்த பாத்திரப் படைப்பு இன்றியமையாத தேவையாகும். நாவலாசிரியர்கள் தாம் தேர்ந்தெடுத்த கதைக்கருவை நாவலாக எழுதும்போது தம்முடைய சிந்தனைகளுக்கு உயிர் கொடுக்கும் பாத்திரங்களை உருவாக்குகின்றனர்; தம்முடைய சாட்சியாக அவர்களைப் பேச வைக்கின்றனர். அவ்வாறு உருவாகும் பாத்திரங்களே வாசகர்களின் மனதைக் கவர்வனவாக அமைகின்றன.

ஆங்கில நாவலாசிரியர் ஈ. எம். ஃபார்ஸ்டர் *Aspects of the Novel* நூலில் பாத்திரங்களை இரு வகையாகப் பகுக்கிறார். ஒரே கருத்தை அல்லது குணத்தைச் சுற்றி அமைந்து

மாறாமல் நிற்கும் ‘தட்டைப் பாத்திரங்கள்’ (flat characters), வாசகரை வியப்பூட்டும் அளவுக்கு மாறுதல்களுடன் வளரும் ‘உருண்டைப் பாத்திரங்கள்’ (round characters) என அவர் வரையறுக்கிறார் (Forster). பாத்திரங்களின் வழியாகவே படைப்பாளரின் சமூகப் பார்வையும் உளவியல் அணுகுமுறையும் வெளிப்படுகின்றன என்பது இவ்விளக்கத்தின் சாரம். அர்னால்டு பென்னெட் என்னும் அறிஞர் “நல்ல நாவல்களின் அடிப்படையே பாத்திரப்படைப்புதான்; வேறொன்றுமில்லை” (கைலாசபதி 216) என்று கூறுகிறார். பென்னெட்டின் இக்கருத்தை வர்ஜீனியா வூல்ஃபும் தம் கட்டுரையில் எடுத்தாள்கிறார் (Woolf). நாவலின் கதைக்களம் பாத்திரப் படைப்பைச் சார்ந்தே இயங்குகிறது என்பதை இக்கருத்துக்கள் வலியுறுத்துகின்றன.

6. சிவசங்கரியின் பாத்திரங்கள்

நாவலாசிரியர் சிவசங்கரி கதைக்கருவுக்கு வலிமை சேர்க்கும் வண்ணம் பாத்திரங்களை உருவாக்கியுள்ளார். இயல்பான வாழ்க்கையில் நாம் சந்திக்கும் மனிதர்களைப் போலவே அவரது பாத்திரங்கள் உலவுகின்றன. குடும்பம், தனிமனித வாழ்வு, சமூக வாழ்வு ஆகிய மூன்று தளங்களிலும் சமூகச் சிந்தனை வாய்ந்த பாத்திரங்களை அவர் படைத்துள்ளார். குறிப்பாக மனித மனப்பான்மைக்கும் உயரிய எண்ணங்களுக்கும் முதன்மை கொடுத்து அவர் பாத்திரங்களைப் படைத்துள்ளார் எனலாம்.

7. வளர்த்த கடா: ராஜி – தாய்மையும் சமநோக்கும்

சிவசங்கரியின் பாத்திரப்படைப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்த நாவல் *வளர்த்த கடா*. இந்நாவலில் ராஜி, சம்பத் என்னும் இரு பாத்திரங்கள் எதார்த்தமான கதைக்களத்தை உருவாக்குகின்றன. உயர்ந்த சிந்தனையும் உதவும் பண்பும் கொண்டவர்கள் பூவுலகில் புகழால் நிலைத்து வாழும் பேற்றைப் பெறுகிறார்கள்; இவ்விரு பாத்திரங்களும் மனிதர்கள் இவ்வாறே வாழ வேண்டும் என்னும் சிந்தனையை உணர்த்துவனவாக உள்ளன.

நாவலின் தலைமைப் பாத்திரமாகக் கருதத்தக்கவள் ராஜி. திருமணமாகி எட்டு ஆண்டுகள் கடந்தும் குழந்தைப் பேறு இல்லாமல் துன்புறும் அவள், துளசி என்னும் குழந்தையைத் தத்தெடுத்து, தம் குழந்தையாகவே கருதி அன்பு செலுத்தி வளர்க்கிறாள். பின்னர் அவளுக்குத் தானே ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. இரண்டு குழந்தைகளையும் பாகுபாடின்றிச் சமமாக வளர்ப்பதில் அவள் முனைப்பு காட்டுகிறாள். அவளது குணநலனை நாவலாசிரியர் இவ்வாறு தீட்டுகிறார்:

> *“இயற்கையிலேயே யாரிடமும் மென்மையாய் அன்பாய்ப் பேசும் ராஜிக்கு, எவரிடமும் சுடு சொல் வீச விரும்பாத ராஜிக்கு, எந்த உள்ளமும் நோகும்படி நடக்க முடியாத ராஜிக்கு ...” (சிவசங்கரி, வளர்த்த கடா 49)*

எத்தனை அன்பு செலுத்தி வளர்த்தும், தத்தெடுத்த மகள் துளசி தாயின் அன்பு போலியானது என்று நினைத்துப் பேசும் சொற்கள் ராஜியை மன அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றன. நாவலின் தலைப்பே இந்நிகழ்வைச் சுட்டுகிறது: ‘வளர்த்த கடா

மார்பில் பாய்ந்தது' என்னும் பழமொழியை இது நினைவூட்டுகிறது. மனிதர் மனம் எல்லோரிடத்திலும் ஒன்றுபோல் இருப்பதில்லை என்ற சிந்தனையை இந்நிகழ்வு விதைக்கிறது. தான் நேசித்த மகளால் புண்பட்டாலும் அன்பைக் கைவிடாத ராஜி, ஃபார்ஸ்டர் கூறும் உருண்டைப் பாத்திரத்தின் இயல்புகளைக் கொண்டவள்.

8. வளர்த்த கடா: சம்பத் – பொறுப்பும் முதியோர் பேணலும்

சம்பத் பாத்திரம் ஆண்மகனுக்கு வேண்டிய உயரிய குணங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. குழந்தை இல்லை என்னும் குறை இருந்தபோதும், அக்குறை தெரியாத வண்ணம் மனைவிமீது அன்பு காட்டும் நல்ல மனம் கொண்டவன் அவன். இசை, நடனம் இரண்டிலும் திறம் பெற்ற இரு மகள்களையும் அவர்கள் விரும்பிய வண்ணமே உருவாக்கும் தந்தையாகவும், தன்னைப் பெற்றவர்களை நன்றாகக் கவனித்துக்கொள்ளும் மகனாகவும் அவன் விளங்குகிறான். தன் பெற்றோரிடம் அவன் பேசும் முறை சமூகத்திற்கான செய்தியாக அமைகிறது:

> *"நீங்க ஏன் வீணா அவஸ்தைப்படறீங்க? ... ஊர்ல நீங்களும் அப்பாவும் தனியா இருந்து ஏன் சிரமப்படணும்? பேசாம நிலத்தையெல்லாம் குத்தகைக்கு விட்டுவிட்டு இங்க என்னோட வந்துடுங்க ... வயசான காலத்துல நீங்களும் ஹாய்யா இருக்கலாம்" (சிவசங்கரி, வளர்த்த கடா 15)*

முதியவர்கள் கைவிடப்பட வேண்டியவர்கள் அல்லர்; போற்றிக் காக்கப்பட வேண்டியவர்கள் என்பதை இப்பகுதி தெளிவுபடுத்துகிறது. வயதான பெற்றோரைக் காக்க மனமில்லாத சமூகம் உருவாகிவரும் இன்னாளில், சமூகத்தில் மனநிலை மாற்றத்தை விதைக்கும் பண்புள்ள பாத்திரமாகச் சம்பத் உருவாக்கப்பட்டுள்ளான். அவனது குணம் நாவல் முழுவதும் ஒரே நிலையில் நிற்பதால், ஃபார்ஸ்டர் வகைப்படி அவன் நிலையான அறம் சார்ந்த தட்டைப் பாத்திரம் எனலாம்.

9. ஆயுள் தண்டனை: பரத் – செல்வச் செருக்கு

சிவசங்கரியின் மற்றொரு நாவலான *ஆயுள் தண்டனை* பரத், மோஹனா என்னும் இரு பாத்திரங்களால் வலிமையான கதைக்களத்தைக் கொண்டுள்ளது. பணம் மனிதனின் குணத்தை எவ்வாறு மாற்றும், மிகுதியான செல்வம் அமைந்தபோது அதன் மதிப்பு எவ்வாறு தெரியாமல் போகும் என்னும் சிந்தனை பரத் பாத்திரத்தின் வழி எடுத்துக்காட்டப்படுகிறது. மனைவியை இழந்து தாயின் அரவணைப்போடு குழந்தையை வளர்த்து வரும் அவன், ரோட்டரி கிளப்பில் கவர்னர், பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் துணைத் தலைவர் எனப் பொறுப்புகளில் இருந்தும் தன் நிலையை உணராமல் நடந்துகொள்கிறான். நாவலாசிரியர் அவனை "பணக்காரன், ஊரில் பணத்தைத் தண்ணீராய்ச் செலவழிக்கப் பிரியமுள்ளவன்" (சிவசங்கரி, *ஆயுள் தண்டனை* 49) என்று அறிமுகப்படுத்துகிறார்.

தன்னிடம் பணமும் பதவியும் இருப்பதால் பிறரை மதிக்கத் தெரியாத குணமும் பெண்களை இழிவாகப் பேசும் குணமும் உடையவனாக அவன் விளங்குகிறான். சமூகத்தில் உலவும் பலரின் பிரதிநிதியாக அவன் அமைகிறான். முன்னுரையில்

குறிப்பிட்டதுபோல, பெண்களுக்கு எதிராகச் செயல்படும் ஆண் வாழ்க்கையைச் சிதைப்பவன் என்னும் சிவசங்கரியின் கருத்து இப்பாத்திரத்தில் தெளிவாகுகிறது.

10. ஆயுள் தண்டனை: மோஹனா – வறுமையும் மீட்சியும்

பரத்துக்கு முரணாக, வறுமையில் வாடும் பாத்திரமாக மோஹனா படைக்கப்பட்டிருக்கிறாள். வறுமையான சூழலில் வளர்ந்த அவள் தன் படிப்புக்காகத் தன் உடலை விற்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள். இறுதித் தேர்வுக்கு ஐம்பது ரூபாய் கட்ட முடியாமல் தவிக்கும் அவளது நிலையை நாவலாசிரியர் இவ்வாறு வரைகிறார்:

> *"பி.யூ.ஸி இறுதித் தேர்வுக்கு ஒரு மாசம் இருக்கையில் அம்மாவின் வேதனையும் கையில் காலணா இல்லாத கஷ்டமும் மனசில் தேளாய்க் கொட்ட ..." (சிவசங்கரி, ஆயுள் தண்டனை 76)*

தன் வறுமையைத் தோழி இராணியிடம் அவள் எடுத்துச் சொன்னபோது, இராணி அவளைப் பணத்திற்காகத் தவறான வழியில் செல்லவே வழிகாட்டுகிறாள். ஒன்றும் செய்ய வாய்ப்பில்லாத தாய், மனநலம் பாதிக்கப்பட்ட தம்பி ஆகியோருக்காக மோஹனா துணிந்து முடிவெடுக்கிறாள்:

> *"முதன் முதலில் நுங்கபாக்கத்தில் இருந்த அந்த வீட்டில் மாடித் தனியறையில் தன் பெண்மையை நூறு ரூபாய்ப் பணத்துக்கு விற்றபோது, அவளுக்கு வயசு பதினாறுதான்" (சிவசங்கரி, ஆயுள் தண்டனை 89)*

வறுமை மனித மனத்தை எந்த அளவு பாழ்படுத்துகிறது என்பதை நாவலாசிரியர் இங்கு சுட்டிக்காட்டுகிறார். ஆனால் மோஹனா அந்நிலையிலேயே நின்றுவிடவில்லை; படித்து முடித்ததும் பொறுப்பான வேலையில் அமர்ந்து நல்ல பெயரையும் பெறுகிறாள். சூழலால் மாறி, மீண்டு எழும் இப்பாத்திரம் ஃபார்ஸ்டர் கூறும் உருண்டைப் பாத்திரத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். வறுமை நீக்க முடியாதது அல்ல; ஆனால் தன் வறுமையைக் கூறும் இடம் தகுதியானதாக இருக்க வேண்டும்; இல்லையேல் தவறான வழிகாட்டுதலால் தவறான வழியில் செல்ல நேரிடும் என்பதை நாவல் வலியுறுத்துகிறது.

11. ஒப்பீட்டு நோக்கு

வளர்த்த கடா நாவலில் சமூகத்திற்கு நலம் விளைவிக்கும் உயரிய குணங்களின் இருப்பிடமாகப் பாத்திரங்களை அமைத்த நாவலாசிரியர், *ஆயுள் தண்டனை* நாவலில் பொறுப்பற்ற ஆண்மகனின் வாழ்க்கையையும் வறுமையோடு போராடும் பெண்ணின் வாழ்க்கையையும் எதிர்நிறுத்திக் காட்டுகிறார்.

பாத்திரம்	நாவல்	மையப் பண்பு	பாத்திர வகை (ஃபார்ஸ்டர்)	சமூகச் செய்தி
ராஜி	வளர்த்த கடா	மென்மை, தாய்மை, சமநோக்கு	உருண்டை	அன்பு எதிர்பார்ப்பின்றி செலுத்தப்பட வேண்டும்
சம்பத்	வளர்த்த கடா	பொறுப்பு, முதியோர் பேணல்	தட்டை	முதியோர் போற்றிக் காக்கப்பட வேண்டும்
பரத்	ஆயுள் தண்டனை	செல்வச் செருக்கு, பொறுப்பின்மை	தட்டை	பணமும் பதவியும் குணத்தைச் சிதைக்கலாம்
மோஹனா	ஆயுள் தண்டனை	வறுமை, துணிவு, மீட்சி	உருண்டை	வறுமையில் சரியான வழிகாட்டுதல் தேவை

சமூகம் எதார்த்தமான பல்வேறு சூழல்களைக் கொண்டது. சமூகத்தைப் புரிந்துகொண்டு வாழ்பவர்கள் உயர்ந்துவிடுகிறார்கள்; தவறான வழிகாட்டுதலோடு செல்பவர்கள் வாழ்க்கையை வீணாக்கிக்கொள்கிறார்கள் என்னும் சிந்தனையை சிவசங்கரி இரு நாவல்களிலும் பதிவு செய்துள்ளார்.

12. ஆய்வுமுடிவுகள்

- சிவசங்கரி தமது அறச் சிந்தனைகளைப் பாத்திரங்களின் வழியாகவே வெளிப்படுத்துகிறார்; பாத்திரப் படைப்பே அவரது நாவல்களின் மையம்.
- ராஜியும் சம்பத்தும் அன்பு, விட்டுக்கொடுத்தல், சமநோக்கு, முதியோர் பேணல் ஆகிய குடும்ப அறங்களின் மாதிரிகளாகப் படைக்கப்பட்டுள்ளனர்.
- தத்தெடுத்த மகளின் நன்றியின்மை வழி, அன்பு எல்லாரிடத்திலும் ஒரே விளைவைத் தருவதில்லை என்ற நடப்பியல் உண்மையை *வளர்த்த கடா* உணர்த்துகிறது.
- மிகுதியான செல்வமும் பதவியும் பொறுப்பின்மையையும் பெண்களை இழிவுபடுத்தும் பண்பையும் வளர்க்கும் என்பதைப் பரத் பாத்திரம் காட்டுகிறது.
- வறுமையும் தவறான வழிகாட்டுதலும் ஒரு பெண்ணைத் தவறான வழிக்குத் தள்ளும் என்பதையும், கல்வியும் உழைப்பும் அவளை மீட்கும் என்பதையும் மோஹனா பாத்திரம் உணர்த்துகிறது.
- ஃபார்ஸ்டரின் வகைப்பாட்டின்படி, ராஜியும் மோஹனாவும் உருண்டைப் பாத்திரங்களாகவும், சம்பத்தும் பரத்தும் தட்டைப் பாத்திரங்களாகவும்

அமைகின்றனர்; பெண் பாத்திரங்களுக்கே சிவசங்கரி அகவாழ்வின் ஆழத்தைத் தருகிறார்.

13. முடிவுரை

எழுத்தாளர் சிவசங்கரி தாம் படைத்த நாவல்களின் வாயிலாகச் சமூகத்தில் மண்டிக்கிடக்கும் சிக்கல்களுக்குத் தீர்வு காண முனைகிறார். சிக்கல் தோன்றும்போது மனிதர்கள் அதைக் களைய முயல வேண்டும், அதற்குச் சரியான வழிகாட்டுதலைப் பெற வேண்டும்; இல்லையெனில் தவறான வழியில் செல்ல நேரிடும் என்பதை அவர் பதிவு செய்துள்ளார். *வளர்த்த கடா* குடும்பத்தின் உள்ளே நிகழும் அறத்தையும் நன்றியின்மையையும், *ஆயுள் தண்டனை* செல்வமும் வறுமையும் மனிதனை மாற்றும் விதத்தையும் விளக்குகின்றன. தெளிவான மனநிலையோடு பிறருக்கு உதவும் மனநிலையையும் மக்கள் பெற வேண்டும்; அதுவே எதிர்காலச் சமூகம் வாழ்வதற்கு வழிவகை செய்யும் என்பதை சிவசங்கரி பாத்திரங்களின் வழியாக நுட்பமாக விளக்கியுள்ளார். சிவசங்கரியின் பிற நாவல்களிலும் இவ்வாறு பாத்திரங்களை ஒப்பிட்டு ஆராய்வது மேலாய்வுக்குரிய தளமாகும்.

துணைநூல் பட்டியல் ***(Works Cited – MLA 9)***

References

"About Sivasankari." Kutty, by Sivasankari, Everand, www.everand.com/book/801808672/Kutty. Accessed 7 Nov. 2026.

Forster, E. M. Aspects of the Novel. Edward Arnold, 1927.

கைலாசபதி, க. [Kailasapathy, K.]. தமிழ் நாவல் இலக்கியம் [Tamil Novel Ilakkiyam]. பாரி நிலையம் [Pari Nilayam], 1968.

சிவசங்கரி [Sivasankari]. ஆயுள் தண்டனை [Āyuḷ Taṇṭaṉai]. வானதி பதிப்பகம் [Vanathi Pathippakam], 1975.

---. வளர்த்த கடா [Vaḷartta Kaṭā]. வானதி பதிப்பகம் [Vanathi Pathippakam], 1979.

"Sivasankari." Payirai Meyum Veligal, by Sivasankari, Everand, www.everand.com/book/316080562/Payirai-Meyum-Veligal. Accessed 7 Nov. 2026.

சுந்தரராஜன், பெ. கோ. (சிட்டி), மற்றும் சோ. சிவபாதசுந்தரம் [Sundararajan, P. G. (Chitti), and So. Sivapathasundaram]. தமிழ் நாவல்: நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் [Tamil Novel: A Hundred Years of History and Growth]. க்ரியா [Cre-A], 1977.

Woolf, Virginia. Mr. Bennett and Mrs. Brown. Hogarth Press, 1924.